கோவை மாவட்ட நீதிமன்றத்திற்கான கூடுதல் கட்டிடம் கட்டும் திட்டம்.

294—(*வினா எண் 21523) திரு. மா. சின்னராசு: மாண்புமிகு சட்டம் மற்றும் தொழில் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கோவை மாவட்ட நீதிமன்றத்திற்கான கூடுதல் கட்டிடம் கட்டும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) இப்பணி எப்போது துவக்கப்படும்?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : (அ) ஆம்.

(ஆ) கோவை மாவட்ட நீதிமன்றத்திற்கு கூடுதல் கட்டிடம் கட்டுவது குறித்த திட்டம் மற்றும் மதிப்பீடு சென்னை உயர்நீதி மன்றத்திடமிருந்து இன்னும் பெறப்படவில்லை. அது குறித்து திட்டம் மற்றும் மதிப்பீடு பெறப்பட்ட உடனே அரசின் நிதி நிலைக்கேற்ப நடவடிக்கை எடுக்கப்படும்.

திரு. மா. சின்னராசு: தலைவர் அவர்களே, கோவையில் தொழிலாளர் நீதி மன்றம் மற்றும் குற்றவியல் நீதிமன்றங்கள் நகரின் நான்கு பகுதிகளில் வெவ்வேறு இடங்களில் அமைக்கப்பட்டிருப்பதால் வழக்கறிஞர்களும் வழக்காட வருகிற பொது மக்களும் மிகுந்த பாதிப்புக்கு ஆளாகிறார்கள். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் நேரில் கவனம் செலுத்தி இந்த நீதிமன்றத்திற்கான ஆக்க நடவடிக்கைகளை எடுத்து வந்தார்கள். நீதி மன்றத்திலிருந்து அதற்கான திட்ட மதிப்பீடுகள் கொடுக்கப்படாமல் இருப்பதாக அமைச்சர் அவர்கள் பதிலில் தெரிவித்தார்கள். ஆகவே இதன் அவசரத்தைக் கருதி வெகு விரைவில் அதற்கான திட்ட மதிப்பீட்டினை உயர்நீதி மன்றத்திலிருந்து பெற்று அரசாங்கம் அதற்கான ..ங்கீகாரத்தை இந்த ஆண்டு வழங்குமா?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : தலைவர் அவர்களே, அந்தப் பகுதிக்கு ஒருங்கிணைந்த நீதிமன்றத்தின் மைய அமைப்பு தேவை என்பதை அரசாங்கம் உணர்ந்து மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னதுபோல் அரசாங்கம் நடவடிக்கைகளை மேற்கொண்டது. சிட்டத்தட்ட 141 லட்சம் ரூபாய் அதல்குச செலவாகும் என்று கணிக்கப்பட்டது. உயர்நீதி மன்றத்தைப் பொறுத்தவரையில் அந்தப் ப்ளானைப் பொறுத்து, டிஸைன் அன்ட் ப்ளான்-ல் சில மாற்றம் செய்து அது குறித்து தங்கள் கருத்தை அறிவிப்பதாகச் சொன்னார்கள். மாநில அரசு உயர் நீதிமன்றத்தினிடமிருந்து விரைவில் அவர்கள் கருத்தைப் பெற்று தக்க நடவடிக்கைகள் எடுக்கும்.

1984 மார்ச் 13]

திரு. மா. சின்னராசு : தலைவர் அவர்களே, கட்ட இருக்கும் அந்தக் கட்டிடத்தில் வழக்கறிஞர்கள் சேம்பரும் சேர்க்கப்பட்ருக்கிறதா ?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : தலைவர் அவர்களே, தாமதத்திற்கு ஒரு காரணம், வழக்கறிஞர்களுக்கு அதில் இடம் வேண்டும் என்று அந்தத் திட்டத்தில் திருத்தம் செய்யவேண்டும் என்று உயர்நீதிமன்றத்தை அரசு கேட்டுக் கொண்டிருக்கிறது. உயர்நீதிமன்றமும ஒத்துக்கொண்டிருக்கிறது. அவர்கள் கருத்து தெரிந்தவுடன் நடவடிக்கைகள் எடுக்கப்படும்.

(முற்பகல் 9-30)

திரு. கு. ரமணி : தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் அதற்கான ஒப்புதலைப் பெற்று, இந்தக் கட்டிட வேலைகளை சீக்கிரமாக முடிக்கப் போவதாகக் குறிப்பிட்டார்கள். ஆனால் கோயமபுத்தூரில் நீதிமன்றங்கள் அநேகமாக எல்லாக் கட்டிடங்களும் பாழாகி இருக்கின்றன. செஷன்ஸ் கோர்ட் கட்டிடம் ஒன்றுதான் புதிய கட்டிடமாக இருக்கிறது. மற்றக் கட்டிடங்கள் ரொம்ப பழைய, பயன்படுத்த முடியாத அளவுக்கு, பார்ப்பதற்கே கஷ்டமாக இருக்கிறது. அப்படிப்பட்ட ஒரு நிலை இருக்கிறது. ஆனால், இதுவரையில் அதைப்பற்றி ஒரு சரியான கவனம் செலுத்தாமல் இருந்ததற்கு என்ன காரணம் ? சென்ட்ரல் ஜெயில் காம்பவுண்டில் ஏராளமான புதிய கட்டிடங்களைக் கட்டிக் கொண்டு வருகிறார்கள். அங்கே ஒரு பெரிய பரப்பளவில், தொழில் கோர்ட் உள்பட மற்ற எல்லா நீதிமன்றங்களின் கட்டிடங்களையும் கட்ட இடம் இருக்கிறது. அது அரசினுடைய சொந்த இடமாக இருக்கிறது. அதை அரசு எடுத்து, அங்கே கட்டிடங்கள் கட்டுவற்குப் பதிலாக வேறு பல இலாக்காக்களுக்கு ஒதுக்கிவிட்டு, இதற்கு இப்போது ஒப்புதலுக்காக காத்திருக்க வேண்டிய காரணம் என்ன ? எந்தக் காலத்திற்குள் கட்டி முடிக்கப்படும் ?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கோவையிலே சிறைச்சாலைக்கு அருகே காலி இடங்கள் அரசுக்குச் சொந்தமாக இருப்பது உண்மைதான். நீதிமன்றங்கள் கட்டுவதற்கு இடமில்லை என்ற பிரச்னையில்லை; இடம் தாராளமாக இருக்கிறது ; கிடைக்கிறது. சிறைச்சாலை அருகே பல கட்டிடங்கள் எழுப்புவதாக மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னார்கள். அது ஏழாவது திட்டத்தின் கீழ் சிறைச்சாலைகள் கட்டிடங்கள் கட்டுவதற்காக 6, 7 கோடி ரூபாய் மத்திய அரசால் ஒதுக்கப்பட்டிருக்கிறது. ஆனால், மாண்புமிகு உறுப்பினர் அவர்களின் கவனத்திற்கு கொண்டுவர விரும்புவது, இந்த அரசைப் பொறுத்த வரைக்கும் நீதிமன்றங்களிலே பணியாற்றும் நீதிபதிகளுக்கு எல்லா வசதிகளையும் செய்து கொடுக்க வேண்டுமென்பதாகும். இந்த அடிப்படையில்

நீதிபதிகளுக்கு வாகன வசதிகள், சிராக்ஸ் காப்பி எடுக்கும் எந்திரங்கள் தருவது., டேப் ரிக்கார்டர் தருவது, டெலிபோன் வசதிகள் செய்து தருவது போன்ற பல பணிகளைச் செய்திருக்கிறோம். ஆனால், கட்டிடங்களைப் பொறுத்த வரைக்கும் இன்றல்ல, நேற்றல்ல, கடந்த 35 ஆண்டுகளாக நீதிமன்றங்களுக்கு நிதி ஒதுக்கும் முறையில் மத்திய அரசு ஏதோ இதை கவனத்தில் கொள்ளாமல் நான்-பிரையாரிடி என்ற முறையில் ஒதுக்கிவிட்டது. அப்படி கூடாது, அதிகப்படியான நிதியை ஒதுக்க வேண்டுமென்று மத்திய அரசை, மாநில அரசு வற்புறுத்தி, இந்த அடிப்படையில் பல இடங்களில் இடிந்து விழக்கூடிய கட்டிடங்களைக் கட்டுவதற்கு மத்திய அரசிடமிருந்து மாநில அரசிற்கு பணம் கிடைக்கவில்லை யென்றாலும், மாநில அரசு 3 கோடி ரூபாய் ஒதுக்கி, இந்தப் பணியை மேற்கொண்டிருக்கிறோம். இந்த அடிப்படையில் இந்தப் பிரச்னையை அணுகி, இந்தக் கட்டிடத்தைப் பொறுத்தவரைக்கும் விரைவில் கட்டி முடிக்க தக்க நடவடிக்கையை அரசு மேற்கொள்ளும்.

சுருளிப்பட்டியில் ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்கும் திட்டம்.

295 (*வினா எண். 14172)—திரு. ஆர். டி. கோபாலன் : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கம்பம் ஊராட்சி ஒன்றியத்தைச் சேர்ந்த சுருளிப் பட்டியில் ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்கும் திட்டம் அரசு பரிசீலனையில் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : (அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

மருத்துவக் கல்வியை தமிழில் போதிக்கும் திட்டம்

296 (*வினா எண். 14479)—திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன் : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தமிழகத்தில் மருத்துவக் கல்வியைத் தமிழில் போதிக்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : ஆம்.

திரு. என். வரதராஜன் ; பேரவைத் தலைவர் அவர்களே, இன்று மருத்துவத் துறையில் தாய் மொழியிலே பயிற்சி பெறுவதால், மிக துரிதமாக வளர்ச்சி அடையவும், இன்னும் நுண்ணியமாக கல்வியைக் கற்றுக்கொள்ள முடியும் என்று, உலகத்திலுள்ள பல நாடுகள் அப்படி முன்னேறி வருகிறது. அண்டை மாநிலத்திலேகூட அவ்வாறு தாய் மொழியிலே பயிற்சி நடத்திக்